## ஆசிரியர் தேர்வு வாரியம்

## பத்திரிக்கைச் செய்தி

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பள்ளிகளில் தற்போது பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கான தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (தாள் – I மற்றும் தாள் – II) நடத்துவதற்கான அறிவிக்கை ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் (Website: http://www.trb.tn.gov.in) **13.02.2026** இன்று வெளியிடப்படுகின்றது. இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் பணியிலிருக்கும் ஆசிரியர்கள் **01.09.2025**க்கு முன்னர் ஆசிரியர்களாக நியமனம் செய்து பணிபுரிந்து வர வேண்டும். இத்தேர்விற்கான விண்ணப்பம் சார்ந்த அனைத்து விவரங்களும் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், இத்தேர்விற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இணையதளம் வாயிலாக (Online Application) விண்ணப்பிக்க **18.02.2026** முதல் **10.04.2026** வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

நாள் : 13.02.2026

தலைவர்

இடம் : சென்னை – 6